# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| அரியலூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 25.06.2020ம் தேதி வியாழன்கிழமை காலை 11.00 மணிக்கு தனிஅலுவலர் அவகளின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. | | | |
| 25.06.2020 | 306 | <u>பொருள் எண். 01</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழை வடிகால் அமைப்புகள் சேதமடைந்துள்ளதால் மழை காலங்களில் மழை நீர் வடியாமல் நோய் தொற்று ஏற்படும் சுழ்நிலை உருவாகியுள்ளதால் அதனை சரிசெய்ய புதிய மழை நீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்திட தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.1000.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி தயாரிக்கப்பட்ட திட்ட பிரேரனணயை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மேற்காணும் மழை நீர் வடிகால் அமைப்பு பணியினை ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் இதற்கான நிதியினை இந்நகராட்சிக்கு முழு மான்யமாக வழங்க வேண்டியும் கோரிட மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 25.06.2020 | 307 | <u>பொருள் எண். 02</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் டிராக்டர் வாகனத்தின் (TN 61J 7354) முன்பக்கத்தில் உள்ள இரண்டு டயர்கள் மற்றும் டியூப் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதை புதிதாக மாற்றம் செய்யும் பணிகள் நகராட்சிகள் விதி15 மற்றும் 1998ம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள் விதி 16(A)ன் கீழ்மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான பட்டியல் தொகை ரூ.8,250/-னை Globla agencies, Tyres sales & Service, Ariyalur என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சிகள் விதி 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 25.06.2020 | 308 | <u>பொருள் எண். 03</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் மூன்று மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குரும்பன்சாவடி குடிநீர் விநியோக அமைப்புகளில் பொருத்தப்பட்டுள்ள spot chlorination injector and actuator என்ற கோட்பாட்டின்படி Dosage மோட்டார் பம்புகள், ஸ்டார்ட்டர்கள் மற்றும் Spring actuated flow sensor and dry run sensor storage tank braided hose and tubing connector அமைப்புகளுக்கு தேவையான சோடியம் குளோரைட் திரவத்தினை கொள்முதல் 29.05.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>M/s.Tamilnadu Chemicals Industries, Chennai</td><td>0.69% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s.Sruthi Alum Industry, Chennai</td><td>1.38% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.69% குறைவாக கொடுத்த M/s.Tamilnadu Chemicals Industries, Chennai என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>25.06.2020</td><td>309</td><td><u>பொருள் எண். 04</u><br>
இந்நகராட்சி எல்லைக்குள் நுழையும் சரக்கு வகனங்களுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 1.04.2016 முதல் 31.3.2019 வரை திரு.குமார் என்பவரால் ஏலம் எடுக்கப்பட்டு 01.04.2016 முதல் 31.03.2017 வரை மற்றும் 01.04.2017 முதல் 31.03.2018 வரை உரிம தொகை செலுத்தியுள்ளார் 01.04.2018 முதல் 31.03.2019 வரையுள்ள காலத்திற்கு உரிம தொகை ரூ.14,26,019/- செலுத்தக்கோரி இவ்வலுவலக கடித ந.க.எண்.8160/16/அ1, நாள்.15.11.2018 அறிவிப்பு அனுப்பட்டது. அதனை தொடர்ந்து பல அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் குத்தகைதாரர் திரு.கோ.குமார் வாங்க மறுத்து திருப்பி அனுப்பி வைத்துள்ளார் எனவே, குத்தகைதாரர் திரு.கோ.குமார் என்பவரிடமிருந்து குத்தகை தொகையினை சட்டப்படி வசூல் செய்திட அன்னாரின் மீது வழக்கு தாக்கல் செய்திடவும், அதற்கான வழக்கு ஆவணங்கள் தயார் செய்திட ஆகும் செலவினம் ரூ.85,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>25.06.2020</td><td>310</td><td><u>பொருள் எண். 05</u><br>
இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்க்கண்டுள்ள பணியாளர்கள் அலுவலக பணிக்கு வந்து செல்வதற்காக இரண்டு சக்கர வாகனம் வாங்குவதற்கு வாகன முன்பணம் கோரியுள்ளனர்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியாளர் பெயர் (ம) பதவி</th><th>கோரும் முன்பணம்</th></tr>
<tr><td>1</td><td>R. குணசேகரன், இளநிலை உதவியாளர்</td><td>ரூ.50,000/-</td></tr>
<tr><td>2</td><td>R. சித்ரா, அலுவலக உதவியாளர்</td><td>ரூ.50,000/-</td></tr>
<tr><td>3</td><td>R. சீனிவாசன், துப்புரவு பணியாளர்</td><td>ரூ.50,000/-</td></tr>
</table>
மேற்காண்டுள்ள பணியாளர்களுக்கு முன்பணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
அரசாணை எண்.719 நிதித்துறை நாள்.13.10.1993ன்படி உரிய வட்டி விகிதத்துடன் பணியாளரின் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td>25.06.2020</td><td>311</td><td><u>பொருள் எண். 06</u><br>இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்க்கண்டுள்ள பணியாளர்கள் சொந்த பயன்பாட்டிற்காக கணினி கொள்முதல் செய்ய முன்பணம் கோரியுள்ளனர்.<br><table><tr><th>வ. எண்</th><th>பணியாளர் பெயர் (ம) பதவி</th><th>கோரும் முன்பணம்</th></tr><tr><td>1</td><td>P இராஜேந்திரன், உதவியாளர்</td><td>ரூ.50,000/-</td></tr><tr><td>2</td><td>D. செந்தில்குமார், இளநிலை உதவியாளர்</td><td>ரூ.50,000/-</td></tr><tr><td>3</td><td>A. நூர்ஜஹான், புள்ளி விவர குறிப்பாளர்</td><td>ரூ.50,000/-</td></tr></table>மேற்காண்டுள்ள பணியாளர்களுக்கு முன்பணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அரசாணை எண்.719 நிதித்துறை நாள்.13.10.1993ன்படி உரிய வட்டி விகிதத்துடன் பணியாளரின் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>25.06.2020</td><td>312</td><td><u>பொருள் எண். 07</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் வாகனத்தின் (TN 61 C 4681) பின்பக்கம் டயர்கள் மற்றும் டியூப் பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ளதால், புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.35,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>25.06.2020</td><td>313</td><td><u>பொருள் எண். 08</u><br>மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவகளின் கடிதம் ந.க.ஆ1.6979.2019, நாள்.21.01.2020ல் தெரிவித்துள்ளவாறு, அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரியலூர் தெற்கு கிராம புல எண்.250/7 மற்றும் சில புலங்கள் திட்டப்பரப்பு 10.84.15 ஹெக்டர் நிலம் “அரசு புறம்போக்கு அரசு கலைக்கல்லூரி” என பதிவாகியுள்ள நிலத்தினை அரசு மருத்துவக்கல்லூரி அமைக்க ஏதுவாக சுகாதாரத்துறைக்கு நிலவுரிமை மாற்றம் செய்ய நகராட்சிக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்ற சான்று வழங்க கோரப்பட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>25.06.2020</td><td>314</td><td><u>பொருள் எண். 09</u><br>அரியலூர் நகராட்சி அலுவலக பணிகள் பயன்பாட்டில் உள்ள கணினிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும், கணினியில் பழுதடையும் உதிரி பாகங்களை மாற்றம் செய்யவும் மற்றும் பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்களை கொள்முதல் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.197, நாள்.13.12.2019ன்படி ஏற்கனவே அனுமதி பெறப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகளின்படி GEEVEE System, அரியலூர் என்ற நிறுவனத்தின் மூலம் வாங்கிக்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, கூடுதலாக பொறியியல் பிரிவில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும் நிலையில் அதற்கான திட்டப்பிரேரணைகள், மதிப்பீடுகள், பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் அனைத்து பிரிவு பணிகளுக்கும் தேவைப்படும் உதிரி பாகங்கள் மற்றும் டோனர்கள் வாங்கி கொள்வதற்கு கூடுதலாக ஆகும் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு</u><br>அலுவலகப்பணியில் எவ்வித தொய்வும் ஏற்படாமல் இருக்க, ஏற்கனவே வேலை உத்திரவ வழங்கப்பட்ட GEEVEE System, அரியலூர் என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட விலை விகிதத்தின்படி, வாங்கி கொள்ள ஆகும் கூடுதல் செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 25.06.2020 | 315 | <u>பொருள் எண். 10</u><br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை பணிக்கு வீடு வீடாக குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனங்கள் (BOV) பழுதடைந்த நிலையில் இயங்காத நிலையில் இருக்கும் வாகனங்களை பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 இலட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 25.06.2020 | 316 | <u>பொருள் எண். 11</u><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர், அரியலுர் அவர்களின் அறிவுறுத்தல்களின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவுதலை கட்டுப்படுத்தும் பொருட்டும், மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முதிர்கொசுக்களை அழிக்கும் பணிக்கு (Adult Control) பயன்படுத்தப்படும் புகைமருந்து அடிப்பான்களை பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 25.06.2020 | 317 | <u>பொருள் எண். 12</u><br>மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் காணொளி கலந்தாய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 18 வார்டுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோயை கட்டுப்படுத்தும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மற்றும் வணிகப்பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் உடல்நிலை அறிகுறிகள் பற்றிய விபரங்களை சேகரித்து மருத்துவ முகாம்களுக்கு அனுப்பி வைத்தல் மற்றும் தொற்று நோய்கள், நாட்பட்ட நோயாளிகள் பற்றிய விபரம் சேகரித்தல் பணிக்களுக்கு 18 வார்டுகளுக்கு கணக்கு எடுப்பாளர்கள் நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 25.06.2020 | 318 | <u>பொருள் எண். 13</u><br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை பணிக்கு வணிக நிறுவனங்களில் மக்காத கழிவுகள் சேகரிக்கப்பயன்படுத்தப்படும் Etcher வாகனம் FCக்கு அனுப்பி வைக்கப்படுவதால், குப்பைகள் சேகரிக்கும் பணி மற்றும் கொரோனா தடுப்பு பணி, தனிமைப்படுத்தப்படும் பகுதிகளில் குப்பைகள் சேகரிக்கும் பணிகள தேக்கம் அடையும் நிலை ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு தனியார் வாகனத்தினை வாடகைக்கு எடுத்து பயன்படுத்துவற்கான உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 25.06.2020 | 319 | <u>பொருள் எண். 14</u><br>அரியலூர் நகராட்சியில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.1317/பி3/2016, நாள்.02.06.2020ன்படி தேதிய செயல்முறை உத்திரவின்படி, ஒப்பந்த அடிப்படையில் 124 துப்புரவு பணியாளர்களை பயன்படுத்தி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வருட வாரியாக மூன்று ஆண்டு காலத்திற்கு துப்புரவு பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997ன்படி, துப்புரவு பணியாளர்களை பணியமர்த்திக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் வாயிலாக, கருத்துரு அனுப்பட்டு, கோப்பு நிலுவையில் உள்ளதால், பொது சுகாதார அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்ற தீர்மானத்தின் வாயிலாக அங்கீகரிக்கப்பட்டு, பணியினை மேற்கொள்ள 23.09.2019 முதல் 22.03.2020 முடிய உள்ள ஆறுமாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து 23.03.2020 முதல் 22.06.2020 முடிய மூன்று மாதகாலத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது. எதிர்வரும் 22.06.2020 உடன் முடிவடைய உள்ளதாலும், நிர்வாக காரணங்களினாலும், மேற்படிகருத்துரு கோப்பு நடவடிக்கையில் உள்ளது.<br>தமிழ்நாடு முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸ் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், பொதுமக்களின் நலன் மற்றும் பொது சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடர்ந்து திறம்பட செயல்முறைப்படுத்திட ஏதுவாக, தற்போது துப்புரவு பணியை மேற்கொண்டு வரும் Our Land Engineering Works Private ltd., Chennai என்ற நிறுவனத்தின் இசைவு கடித்தினை ஏற்று, மாவட்ட ஆட்சித்தலைவர் அரியலூர் அவர்களால் வெளியிடப்பட்ட புதிய தினக்கூலி அடிப்படையில் 23.06.2020 முதல் 22.09.2020 வரையிலான மூன்று மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து Our Land Engineering Works Private ltd., Chennai என்ற நிறுவனம் துப்புரவு பணியினை மேற்கோள்ளவும், அதற்கான தொகையினை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி பெறலாம். மேலும், அதற்கான தொகையினை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி பெறலாம். மேலும், அதற்கான செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலன்கருதி, மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி அதற்கான தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் சார்ந்த பணி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

ஆணையர்,
அரியலூர் நகராட்சி.